# தமிழ்நாடு உள்ளாட்சி அமைப்புகள் முறைமன்ற நடுவம்

எண்.100 அண்ணா சாலை, கிண்டி, சென்னை–600 032.
தொலைபேசி: 044–22201337
மின்னஞ்சல் முகவரி: ombudsmanlocal@tn.gov.in

தமிழ்நாடு உள்ளாட்சி அமைப்புகள் முறைமன்ற நடுவர், சென்னை–600 032
முன்னிலை: முனைவர் சோ. அய்யர், இ.ஆ.ப., (ஓ),

முறையீட்டு மனு (மு.மு) எண்: 0819/ஊராட்சி/2018

நாள்:29/6/2018

சி. ஜெ. ஸ்ரீதர்,
2/131, V. வில்லக்குண்டாபுரம்,
விருகல்பட்டி போஸ்ட், நெகமம் (வழி),
திருப்பூர் மாவட்டம்.
– முறையீட்டு மனுதாரர்

எம். பாலமுருகன்,
முன்னாள் ஊராட்சி செயலாளர்,
வருகல்பட்டி ஊராட்சி,
திருப்பூர் மாவட்டம்.
– எதிர் மனுதாரர்

## ஆணை

திருப்பூர் மாவட்டம், குடிமங்கலம் ஊராட்சி ஒன்றியம், வருகல்பட்டி ஊராட்சியில் வசிக்கும் திரு. சி. ஜெ. ஸ்ரீதர், அவருடைய 20.6.18 நாளிட்ட கடிதத்துடன் ஊரக வளர்ச்சி கூடுதல் இயக்குநர், ஊரக வளர்ச்சித்துறை, சென்னை அவர்களுக்கு அனுப்பிய 5.4.17 நாளிட்ட புகார் மனுவின் நகலினையும், சமூக தணிக்கை அறிக்கைகளின் நகல்களையும் இணைத்து அனுப்பியுள்ளார். மேற்படி புகார் மனுவில், திருப்பூர் மாவட்டம், குடிமங்கலம் ஊராட்சி ஒன்றியத்திற்குட்பட்ட விருகல்பட்டி ஊராட்சியில் மகாத்மா காந்தி ஊரக வேலை உறுதி திட்டத்தில் 8.11.16 அன்று சிறப்பு கிராமசபைக் கூட்டம் நடைபெற்றது என்றும், அந்த கிராம தணிக்கை அறிக்கையில் கீழ்கண்ட முறைகேடுகள் நடைபெற்று உள்ளது என்றும் தெரிவித்துள்ளனர்.

(1) குளம் தூர்வாரும் பணியில் ரூ.4,41,702/– அரசுக்கு இழப்பு ஏற்படுத்தியுள்ளார்.

(2) பணித்தள பொறுப்பாளர் தினசரி வருகைப் பணித்தாளில் அடித்தல் திருத்தம் மேற்கொள்ளப்பட்டுள்ளது.

(3) ஊராட்சி செயலாளரின் தந்தை மயில்சாமி மற்றும் தாய் சரஸ்வதி ஆகியோர்கள் 42 நாட்கள் வேலை செய்யாமல் தலா ரூ.8,052/– எடுத்துள்ளனர்.

(4) கிராம சேவை மையம் கட்டியதில் முறைகேடு புரிந்து அரசு நிதி ரூ.3,29,400/– ஐ கையாடல் செய்துள்ளார் மற்றும்

(5) சேவை மையம் கட்டுதலில் ஈடுபட்ட பணியாளர்களின் ஜாதியை தவறாக பதிவு செய்து அரசை ஏமாற்றியுள்ளார்.

மேற்காண் செயல்களுக்கு பொறுப்பான அலுவலர்கள் மீது நடவடிக்கை எடுக்கக் கோரியுள்ளார்.

2014 ஆம் ஆண்டு தமிழ்நாடு உள்ளாட்சி அமைப்புகள் முறைமன்ற நடுவர் சட்டம், பிரிவு 2, உட்பிரிவு 7ன்படி "உள்ளாட்சி அமைப்பு" என்பதற்கான பொருளில் "ஊராட்சி மன்றம்" மற்றும் "ஊராட்சி ஒன்றியம்" என்ற அமைப்புகள் வரையறுக்கப்படவில்லை. எனவே, மனுதாரரின் மனு மீது இம்முறைமன்றத்தால் எவ்வித நடவடிக்கையும் மேற்கொள்ள வழிவகை இல்லை. எனவே, இம்மனுவினை மாவட்ட ஆட்சித் தலைவர், திருப்பூர் மாவட்டம் அவர்களுக்கு தக்க நடவடிக்கைக்காக மேலனுப்பலாம் என முடிவு செய்து, அவ்வாறே அனுப்பப்படுகிறது. மேலும் இப்பொருள் குறித்து திருப்பூர் மாவட்ட ஆட்சித் தலைவர் அவர்களை அணுகுமாறு மனுதாரருக்கு அறிவுறுத்தி ஆணையிடப்படுகிறது.

2018 ஆம் ஆண்டு ஜூன் திங்கள் 29-ஆம் நாள் என்னால் கையொப்பமிட்டு, அலுவலக முத்திரையிட்டு இவ்வாணையிடப்படுகிறது.

–//ஒப்பம்//––

**தமிழ்நாடு உள்ளாட்சி அமைப்புகள் முறைமன்ற நடுவர்**

ஆணைப்படி அனுப்பப்படுகிறது/

செயலாளர்.

3/7/18

3.7.18

3/7/18

<u>பெறுநர்</u>

திரு. சி. ஜெ. ஸ்ரீதர்,
2/131, V. வில்லக்குண்டாபுரம்,
விருகல்பட்டி போஸ்ட், நெகமம் (வழி),
திருப்பூர் மாவட்டம்.

<u>நகல்</u>

1. மாவட்ட ஆட்சித் தலைவர், திருப்பூர் மாவட்டம், திருப்பூர். (இணைப்புகளுடன்)
2. முறைமன்ற நடுவர் அவர்களின் நேர்முக எழுத்தர்.
3. உதவி பிரிவு அலுவலர் (ஊராட்சி)